## தலைப்பு 296 - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2016 ஆம் ஆண்டு

தலைப்பு 296 - இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், புத்தகங்கள், பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2017 செப்தம்பர் 22 ஆந் திகதி இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள் மற்றும் காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

### 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### மொத்த ஏற்பாடும் செலவும்

திணைக்களத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 65.87 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 59.66 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த தேறிய நிதி ஏற்பாடுகளில் ரூபா 6.21 மில்லியன் அதாவது 9.43 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| செலவினம் | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 59.83 | 56.32 | 3.51 | 5.87 |
| மூலதனம் | 6.04 | 3.34 | 2.70 | 44.70 |
| மொத்தம் | **65.87** | **59.66** | **6.21** | 9.43 |

## 2.2 வருமானக் கணக்குகள்

### மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம்

திணைக்களத்தினால் 2016 ஆம் ஆண்டிற்காக 10.01.03.00 வருமானக் குறியீட்டிற்காக ரூபா 1,200.00 மில்லியன் வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன், அவ்வருமான மதிப்பீடு 900 மில்லியன் வரை திருத்தம் செய்திருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 1,370.45 மில்லியன் வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 114.20 சதவீதமாக இருந்தது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமானக் குறியீடு | 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | நிதி ஏற்பாட்டின் சதவீதமாக மிகை |
|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளபடியான வருமானம் | மிகை | |
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 10.01.03.00 | 1,200.00 | 1,370.40 | 170.45 | 14.20 |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

### பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்குரிய 29601 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளவாறானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளவாறானது** |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 5.13 | 5.13 | 2.40 | 2.76 | 20.00 | 12.85 |

## 2.4 கட்டுநிதிக் கணக்கு

2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திணைக்களத்திற்குரிய 7002/0000/00/0048/0016/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கில் மீதி ரூபா 59.41 மில்லியனாக இருந்தது.

## 2.5 பொது வைப்புக் கணக்கு

திணைக்களத்தின் கீழான 6000/0000/00/0018/0127/000 ஆம் இலக்க வைப்புக் கணக்கின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ரூபா 14.09 மில்லியனாக இருந்தது.

## 2.6 கணக்காய்வு அவதானிப்புக்கள்

திணைக்களத்தின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

# 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

## 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டும் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | பிணைப் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பாக நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 காணாமல் போன உறுதிச்சீட்டுக்கள்**

மீளாய்வாண்டிற்குரிய ரூபா 53,938 ஆன சம்பளக் கொடுப்பனவுகளுக்குரிய உரிய உறுதிச்சீட்டொன்றும் இணையத்தள தொடர்பிற்காக செலுத்திய ரூபா 337 இற்குரிய உறுதிச்சீட்டொன்றும் காணாமல் போயிருந்தன.

**3.3 பாதீட்டு முரண்கள்**

**பாதீட்டு விலகல்**

07 செலவின விடயங்களுக்காக மிகை நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதிஏற்பாட்டில் 19 சதவீதம் முதல் 54 சதவீதம் வரையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

**3.4 வருமானக் கணக்குகள்**

திணைக்களத்தின் தலைவர் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக 10.01.03.00 ஆம் இலக்க வருமான மதிப்பீட்டைத் தயாரித்தல், வருமானத்தைச் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பித்தல் போன்ற பணிப்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தகன. அந்த வருமானக் குறியீட்டிற்குரித்தாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடு அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 1,200.00 மில்லியன் வருமானத்தை சேகரிப்பதற்கு மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் உள்ளவாறான வருமானமாக ரூபா 1,370.45 மில்லியன் சேமிக்கப்பட்டிருந்தது. ஆண்டினுள் வருமானத்தை கூடுதலாக சேகரிக்க முடியுமாக இனங்காணப்பட்டிருந்த போதிலும், அதன் பிரகாரம் வருமான மதிப்பீட்டை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 யூலை 20 ஆந் திகதிய 01/2015 ஆம் இலக்க அரச நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் தொடர்பான சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் வருடாந்த மதிப்பீடு ஒவ்வொரு ஆண்டிலும் யூலை 31 ஆந் திகதிக்கு முன்னர் நிதிக் கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் பணிப்பாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2016 ஆம் ஆண்டின் வருமான மதிப்பீடு 2015 ஒக்தோபர் 07 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 7 ஆம் பந்தியின் பிரகாரம் அரையாண்டு வருடாந்த வருமான அறிக்கை குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியின் இறுதி திகதியிலிருந்து 15 நாட்களுக்குள் அரச நிதிக் கொள்கை திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

29601 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான தொடர்பான 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக்கூற்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கடன் பதிவேட்டின் (CC10) மீதிகள் முறைப்படி சமப்படுத்தப்பட்டு முன் கொண்டு வரப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

(ஆ) இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதிகள் மற்றும் பெறுமதிகள் என்பவற்றை கண்டு பிடிக்க முடியாதவாறு கடன் பதிவேட்டில் பதிவுகள் இடப்பட்டிருந்ததுடன் சந்தர்ப்பங்களும் அழிக்கும் மை (Tipex) இட்டு பதிவுகள் மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன. அவ்வாறே உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்ற திகதிகள் பதியப்படாத சந்தர்ப்பங்களும் காணப்பட்டன.

## 3.6 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### 3.6.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் சகல அமைச்சுக்கள், திணைக்களங்கள் பாதீட்டு சட்டகத்தினுள் குறித்த நிதி ஆண்டிற்குரிய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட செயல் நடவடிக்கைகத் திட்டத்தில் மூன்று செலவின விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 9.95 மில்லியனாக இருந்த போதிலும் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் அவ்விடயங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடு ரூபா 5.25 மில்லியனாக இருந்தது. அதன் பிரகாரம் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் நிதிஏற்பாடு தொடர்பில் கருத்திற்கொள்ளாமல் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**3.6.2 உள்ளகக் கணக்காய்வு**

-----------------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றினை பராமரிப்பதன் முக்கியத்துவம் 2016 பெப்ரவரி 10 ஆந் திகதி நடைபெற்ற பொதுக் கணக்குக் குழு கூட்டத்தின் போது கவனம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தினால் 2017 செப்தம்பர் 22 ஆந் திகதி வரையிலும உள்ளகக் கணக்காய்வு பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.6.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள்**

----------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**3.7 சொத்துக்கள் முகாமைத்துவம்**

-----------------------------------------------------

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

----------------------------------------------------------------------------------------

2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த பொருள் மெய்மையாய்வு ஒவ்வொரு நிதியாண்டிலும் திசெம்பர் 15 க்கு முன் நியமிக்கப்பட வேண்டிய போதிலும், 2016 ஆம் ஆண்டிற்கான பொருள் மெய்மையாய்வு 2017 பெப்ரவரி 07 ஆம் திகதி நியமிக்கப்பட்டிருந்தது. அச்சுற்றறிக்கையின் பிரகாரம் குறித்த திகதியில் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.8 முகாமைத்துவ நலிவுகள்**

-----------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிப்பதற்குரிய இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தின் தரவுகள் மற்றும் இலங்கை சுங்கத்தின் தரவுகளுக்கு இடையே பாரிய தொடர்பொன்று இருக்கும் வகையில் கணனி தளமொன்று ஏற்படுத்தப்படாமையால் ஏற்றுமதி இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் கீழ் இறக்குமதி செய்யப்பட வேண்டிய சில பொருட்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் போலி சுங்க திருத்த வகை இலக்கங்களின் கீழ் இங்க்குமதி செய்யப்பட்ட சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. இதன் காரணமாக இறக்குமதி அனுமதிப்பத்திர கட்டணங்கள் பேரில் அரசிற்கு கிடைக்க வேண்டிய வருமானம் இழக்கப்படுவதாகவும் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட வேண்டிய சில பொருட்கள் கட்டுப்பாடின்றி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுவதும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறு இறக்குமதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்ளப்படாமல் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 13 சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டன.

(ஆ) இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது பொருட்களின் பெறுமதி தொடர்பாக முறையாக ஆராய்ந்து பார்க்காமல் இறக்குமதியாளரால் சமர்ப்பிக்கப்படுகின்ற ஆவணங்களின் பேரில் மாத்திரம் நம்பிக்கை வைத்து

அனுமதிப்பத்திரக் கட்டணங்களை அறவிடுதல் திணைக்களத்தின் வழமையான செயற்பாடாக இருந்தது. இறக்குமதியாளர்களால் அவ்வாறு அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்படுகின்ற பெறுமதி மற்றும் இறக்குமதி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட பெறுமதிக்கு இடையே பாரிய வேறுபாடு காணப்படுவது தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அநேகமாக அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது சமர்ப்பிக்கப்படுகின்ற கூறுவிலையை விட இறக்குமதி ஆவணங்களில் குறிப்பிடப்பட்ட விலைகள் கூடிய பெறுமதியை எடுத்திருந்தன. எவ்வாறாயினும் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பங்களில் குறிப்பிடப்பட்டிருந்த விலையை அடிப்படையாகக் கொண்டு அனுமதிப்பத்திரக் கட்டணம் தீர்மானிக்கப்படுவதால் அனுமதிப்பத்திரக் கட்டணமாக அரசிற்கு கிடைக்க வேண்டிய பாரியளவு வருமானமொன்று இழக்கப்படுவது அவதானிக்கப்பட்டது. 02 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்டிருந்த 02 கொங்கிறீட் மிக்ஷர் இயந்திரங்களுக்காக அனுமதிப்பத்திரக் கட்டணமாக ரூபா 1.30 மில்லியன் குறைவாக அறவிடப்பட்டிருந்தது.

## 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் மீதான நிலை பின்வருமாறு.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 8 | 03 |
| (ii) | மூன்றாம் நிலை | 71 | 62 | 09 |
| (iii) | இரண்டாம் நிலை | 01 | 01 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 20 | 12 | 08 |
| | மொத்தம் | 103 | 83 | 20 |